வலயக்கல்வி அலுவலகம் - மூதூர்

க.பொ.த. (சா/தர)ப் பரீட்சை - 2020

மாதிரி வினாத்தாள்

பாடம் : தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம் : 1 மணித்தியாலம்

பெயர்- .....

பகுதி I

கவனிக்க : * எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

* 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1), 2), 3), 4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. ''மாகமடங்கலும் மால்விடையும்'' இங்கு **மடங்கல்** என்பதன் பொருள்
1) ஆண்யானை 2) எருது 3) மேருமலை 4) ஆண்சிங்கம்

02. "கொற்றத்தார் குரிசில் இவர் ஆர்?" இங்கு **தார்** என்பது
1) வெற்றி 2) மாலை 3) குளம் 4) தலைவன்

03. ''பிரிவின் கண் பீழை தருவது ஒன்றில்'' இங்கு **பீழை** என்பதன் எதிர்ப்பொருள்
1) துன்பம் 2) கவலை 3) கோபம் 4) இன்பம்

04. 'அந்தரங்கக் கட்டளைகளையெல்லாம் அது நிராகரித்தது' **அந்தரங்கம்** என்பதன் எதிர்கருத்து.
1) பகிரங்கம் 2) உள்ளரங்கம் 3) வெளிரங்கம் 4) அரங்கம்

05. நல்லதொரு சினிமாவுக்கு சினிமாமொழி இன்றியமையாதது. சினிமாமொழியில் அடங்காதது
1) ஒலி 2) ஒளி 3) படத்தொகுப்பு 4) காட்சிப்படிமம்

06. ''பிறிற்றோ தலை சிறந்த சட்ட நிபுணன் '' **நிபுணன்** என்பதன் பெண்பாற் சொல்
1) நிபுணி 2) நிபுணினி 3) நிபுணள் 4) நிபுணை

07. உலகின் தற்போதைய covid -19 வைரஸ் தாக்கம் காரணமாக மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் online இல் நடைபெறுகின்றன. இங்கு online என்பதன் தமிழ் வடிவம்
1) இலத்திரனியல் 2) நிகழ்நிலை 3) செயலிகள் 4) கட்செயலி

08. வரிசை, அழகு, ஆபரணம் என்னும் பலபொருள் தரும் ஒரு சொல்
1) அணி 2) கா 3) கலம் 4) நகை

09. பெடை- அலவன் போல பிணா
1) காளை 2) போத்து 3) கடுவன் 4) கலை

10. பெயர்ச் சொல்லும் பெயர்ச்சொல்லும் சேர்ந்தமைந்த கூட்டுப்பெயர்
1) தொலைக்காட்சி 2) நீரேரி 3) ஏவுகணை 4) பறிமுதல்

11. "மழை பொழியட்டும்" இதில் வரும் பொழியட்டும் என்பது
1) குறிப்புவினை 2) ஏவல்வினை 3) வியங்கோள்வினை 4) எதிர்மறை வினை

12. ஆக்க வினையடையாக அமைவது
1) வேகமாக 2) மெல்ல 3) இன்று 4) நாளை

www.lkedu.lk

மாதத்தின் முதல் வாரம் தரம் 06 தொடக்கம் 11 வரையான
தமிழ் மீடியம் வகுப்புக்கள் இலவசம்
விரும்பியவர்கள் பங்குபற்றலாம்

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

Face book - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

13. சீவனத்தைக் கெடுத்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
1) காது குத்துதல் 2) கழுத்தறுத்தல் 3) கண் கலத்தல் 4) வயிற்றிலடித்தல்

14. வாயில் என்பது
1) குழூஉக்குறி 2) இலக்கணமுடையது 3) மரூஉ 4) இலக்கணப்போலி

15. உருவும் நிழலும் போல என்ற உவமைத் தொடருக்கு நிகரான பிறிதொரு உவமைத் தொடர்
1) எள்ளும் எண்ணெயும் போல 2) ஓடும் புளியம்பழமும் போல
3) தாமரையிலைத் தண்ணீர் போல 4) கரடி பிறை கண்டது போல

16. ''நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்.'' இங்கு அவுக்கென எனும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்
1) அச்சம் 2) கோபம் 3) விரைவு 4) துன்பம்

17. பெற்றிலன் என்பதில் இடம்பெற்றுள்ள எதிர்மறை இடைநிலை
1) இல் 2) அல் 3) ற் 4) இலன்

18. செத்தான் என்பதன் வினையடி.
1) செத்து 2) மரணம் 3) சா 4) சாவு

19. தெட்டத் தெளிவு என்ற கருத்தைத்தரும் உவமைத் தொடர்.
1) முந்திரிக் கொட்டை போல 2) அனலில் இடப்பட்ட மெழுகு போல
3) குடத்துள் விளக்கு போல 4) உள்ளங்கை நெல்லிக்கனி போல

20. '' என்னில் இராமன் நல்லவன்'' இங்கு இடம் பெற்ற வேற்றுமைப் பொருள்.
1) நீங்கள் 2) எல்லை 3) ஏது 4) ஒப்பு

21. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன
1) ஐம்பால் 2) ஐந்திணை 3) ஐந்திலக்கணம் 4) ஐம்பொறி

22. வளர்ச்சி, விருத்தி, கூர்ப்பு என்பவற்றுக்கு நிகரான சொல்
1) பரிமாணம் 2) பரிணாமம் 3) ஆரோக்கியம் 4) புராதனம்

23. வேகமாக ஓடியவனைக் கண்டேன். இங்கு ''ஓடியவனை'' என்பது
1) வினையாலனையும் பெயர் 2) வினைமுற்று 3) தொழிற்பெயர் 4) பெயரெச்சம்

24. உலக நடையறிந்து ஒழுகுதல்.
1) ஒப்புரவு 2) ஒம்படை 3) சிரஞ்சீவி 4) பொதுவியல்

25. நான் நாளைக்குக் கண்டிக்குச் செல்கின்றேன். இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வழு.
1) இடவழு 2) காலவழு 3) எண்வழு 4) காலவழு

26. பின்வருவனவற்றுள் சாரியை என்னும் உறுப்பு இடம்பெற்ற பகுபதம்.
1) நடந்தான் 2) படித்தனன் 3) எழுதினாள் 4) கண்டாள்

27. இலங்கை சுதந்திரமடைந்து ஏறத்தாழ ஏழு.....ஆகிவிட்டன.
1) தசாப்தங்கள் 2) சதாப்தங்கள் 3) சகாப்தங்கள் 4) வற்சரங்கள்

28. ''மார்கழியோடு பரீட்சை முடிவடைகிறது'' என்ற வாக்கியம் உணரத்தும் வேற்றுமைப் பொருள்
1) வரையறைப்பொருள் 2) காரணப்பொருள் 3)எல்லைப் பொருள் 4) நீங்கற் பொருள்

www.kedu.lk

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29. 1) உவமைத் தொகை - மதிமுகம், தேன்மொழி, பவளவாய்
    2) வினைத் தொகை - ஏவுகணை, சுடுசோறு, குளிர்நீர்
    3) உம்மைத் தொகை - எண் எழுத்து, கிளிப்பேச்சு, கருங்குழல்
    4) பண்புத் தொகை - கரும்பலகை, வட்டமேசை, வெள்ளாடை

30. 1) அகப்புணர்ச்சி - உண்டான், பாடினான், கிளியை
    2) புறப்புணர்ச்சி - பூங்கொடி, வேலெறிந்தான், மார்கழித்திங்கள்
    3) இயல்புப்புணர்ச்சி - மண்ணரிப்பு, கடலலை, கலைவிழா
    4) கெடுதல் விகாரம் - மரவேர், வட்டநிலா, நீலவானம்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சனத்தொகை ..... செய்யப்பட்டது.
1) மதிப்பீடு 2. கணிப்பீடு 3. ஆய்வு 4. இழப்பீடு

32. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நீதிபதி குறித்த நாளில் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கும்படி ..... விடுத்தார்.
1) அழைப்பாணை 2) பிடியாணை 3) ஆட்கொணர்வுமனு 4) கோரிக்கை

33. இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்படுவர் என அரசு ..... அளித்தது.
1) உத்தேசம் 2) நிபந்தனை 3) பிரசித்தம் 4) உத்தரவாதம்

34. நாம் நேர்மையாக நடந்து கொள்வோமாயின் எவ்வித துன்பங்களும் எம்மை .....
1) அணுகாது 2) அணுக மாட்டாது 3) அணுகா 4) அணுகமுடியாது

35. கடந்த ஆண்டு நடைபெற்ற கிரிக்கட் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி வெற்றிக் கிண்ணத்தை
1) சுவீகரித்தனர் 2) சுவீகரித்தது 3) சுவீகரித்தன 4) சுவீகரித்தார்

36. வெள்ளம் போல மாணவர் கூட்டம் .....
1) திரண்டது 2) திரண்டனர் 3) திரண்டார்கள் 4) திரண்டன

- தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண்விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கு மாதோ

37. இப் பாடலில் சிறப்பிக்கப்படும் நிலம்
1) வயலும் வயல் சார்ந்த நிலம். 2) மலையும் மலை சார்ந்த நிலம்.
3) காடும் காடு சார்ந்த நிலம் 4) கடலும் கடல் சார்ந்த நிலம்

38. மயில்கள் நடனம் ஆட விளக்குகள் எந்தி நிற்பவை
1) குவளை 2) தாமரை 3) மேகம் 4) வண்டுகள்

39. இப்பாடல் கையாளப்பட்டுள்ள அணி
1) உருவகம் 2) உயர்வு நவிற்சி 3) தற்குறிப்பேற்றம் 4) சிலேடை

www.ikeau.lk

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) எனினும் இது வசதி படைத்தவரக்ளுக்கு மட்டும் சாத்தியமாகும்
ஆ) நீரிழிவு நோயாளர்களுக்குச் சிறுநீரகம் அதிகமாகச் செயலிழப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.
இ) மனிதனின் உடல் உள்ளுறுப்புக்களில் சிறுநீரகமும் பிரதான இடத்தை வகிக்கின்றது.
ஈ) இதனைச் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை மூலம் மாற்றிக் கொள்ள முடியும்.
உ) இது செயலிழந்தால் மனித வாழ்வு அஸ்தமனமாகும்

1) இ, உ, ஆ, ஈ, அ 2) இ, உ, அ, ஈ, ஆ 3) இ, ஆ, அ, ஈ, உ 4) இ, அ, உ, ஆ, ஈ

விடைத்தாள்

1. 4	**11. 3**	**21. 3**	**31. 1**
2. 2	**12. 1**	**22. 2**	**32. 1**
3. 4	**13. 4**	**23. 1**	**33. 4**
4. 1	**14. 4**	**24. 1**	**34. 3**
5. 2	**15. 1**	**25. 4**	**35. 2**
6. 4	**16. 3**	**26. 2**	**36. 1**
7. 2	**17. 1**	**27. 1**	**37. 1**
8. 1	**18. 3**	**28. 1**	**38. 2**
9. 2	**19. 4**	**29. 3**	**39. 3**
10. 2	**20. 4**	**30. 1**	**40. 1**

www.lkedu.lk

வலயக்கல்வி அலுவலகம் - மூதூர்

க.பொ.த. (சா/தர)ப் பரீட்சை – 2020

மாதிரி வினாத்தாள்

பாடம் : தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம் : 2 மணித்தியாலம்

பெயர்- .....

பகுதி II

01. சுருக்கமான விடை தருக.

1) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.

தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து

- தண் கயம் ஆடும் மகளிர் ஒடு கை பிணைந்து

2) உடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் வாக்கியம் அமைக்குக.

- பெயர் - உடு (நட்சத்திரம்)
- வினை – உடு (உடுத்தினான்)

3) பின்வருவனவற்றுள் சுருக்கம் எழுதும் போது தவிர்க்க வேண்டியவை.

வர்ணனைகள், பிரதான கருத்தை இனங்காணல், குறிப் பெடுத்தல், கூறியது கூறல்

- வர்ணனைகள்
- கூறியது கூறல்

4) நேர்முக வர்ணனையாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக.

- நிகழ்வு பற்றிய அறிவு
- பேச்சாற்றல்
- வர்ணிக்கும் திறன்

5) பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.

நவீனமயப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது.

- மாணவர்களுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது.

6) பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.

“ஐயா சாப்பிட்டு முடிஞ்சு ஆறுதலா இருக்கேக்க கேட்க வேணும்.”

- ஐயா சாப்பிட்டு முடிந்து ஆறுதலாக இருக்கும்போது கேட்க வேண்டும்.

7) நான் பாடசாலை சென்றேன். நான் பாடம் படித்தேன். நான் வீடு திரும்பினேன். மேற்படி தனிவாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.

- நான் பாடசாலை சென்று பாடம் படித்து வீடு திரும்பினேன்.

8) கழியும் பிழை பொருட்டள்ளி நன்னூலாங் கடலினுண்டு. இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

- உருவக அணி (நல்ல நூல்கள் கடலாக உருவகிக்கப்பட்டுள்ளது)

9) புணர்த்தி எழுதுக.

அ) வாள் + படை வாற்படை

ஆ) மேற்கு + திசை மேல்திசை

www.lkedu.lk

10) “எடுப்பார் கைப்பிள்ளை” என்ற மரபுத்தொடரின் பொருள் யாது?

- இலகுவில் யாருக்கும் வசப்படக் கூடியவர்கள்

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.
நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

1. மனித குலத்தின் இயல்பு வாழ்வுக்கு இன்று பெரும் அச்சுறுத்தலாகக் காலநிலை மாற்றமும் இயற்கை அனர்த்தங்களும் காணப்படுகின்றன. மனித நடவடிக்கைகளே இவற்றிற்குப் பெரிதும் காரணங்களாக அமைகின்றன. அதனை உணர்ந்து மனிதன் இயற்கையைக் கண்ணும் கருத்துமாகப் பேண வேண்டும் என வலியுறுத்தும் வகையில் ஒரு விளக்கக் **கட்டுரை**

2. நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகம் எமது நாட்டில் அதிகரித்த வண்ணமே உள்ளது. தமது உரிமைகள் பற்றி சிறுவர்களுக்கு போதிய விழிப்புணர்வின்மையும் பெரியோர்கள் சிறுவர்களின் விலை
மதிப்பற்ற தன்மையை உணராமையுமே அடிப்படைக் காரணங்களாகின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதன் அவசியம் பற்றி இருவருக்கிடையிலான **உரையாடல்.**

3. இன்று வயது வேறுபாடின்றி யாவரும் முகப்புத்தகப் பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு அடிமையாகியும் வருகின்றனர். முகப்புத்தப் பாவனை தொடர்பாடல், தகவல் பரிமாற்றம் போன்றவற்றிற்கு
உதவுகின்றது என்ற கருத்துடைய ஒருவருக்கும், சமூகச் சீரழிவுகளுக்கெல்லாம் வலுவூட்டுகின்றது என்ற
கருத்துடைய இன்னொருவருக்குமிடையேயான ஓர் **உரையாடல்**

4. கண்மணி ஓர் ஆசிரியை அவள் பல துன்பங்களைத் தன் வாழ்வில் மலையென எதிர் கொண்டவள். இன்று பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது அழைக்கப்பட்ட சிவராம் என்னும் பிரபல்யமான பிரதேச செயலாளரை வரவேற்று அவன் முகத்தைப் பார்த்த தருணத்தில் முகம் பூரிப்படைகிறது. என்றோ பார்த்த நினைவு. அவள் மனதில் நிழலாடுகிறது.... இச் சம்பவத்தினை மையமாகக் கொண்டு **சிறுகதை**

(25 புள்ளிகள்)

- உள்ளடக்கம் - 12
- மொழிவளம் - 06
- அமைப்பு - 05
- தலைப்பு - 02

www.ikeduk

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

பரந்து விரிந்த உலகம் சுருங்கி இன்று ஒரு குவலயக் கிராமம் ஆகக் காட்சியளிக்கிறது. கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்கிறோம். ஆனால் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி யினால் இன்று உலகம் கையளவு தகட்டுக்குள் அடக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப மற்றும் கணினி பொறித் தொழில்நுட்பம் இவற்றின் சங்கமத்தால் உருவாகிய இணையம் இன்று தகவல் பரிமாற்றத்தில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கணினி மூலம் நமக்கு வேண்டிய தகவல்களை நாமே உலகம் முழுவதும் சென்று தேடி எடுத்துக் கொள்ள முடிகிறது. துலக்கத்துலக்கக் கேட்டதெல்லாம் கொண்டு வந்து தரும் அலாவுதீனின் அற்புத விளக்காக இன்றைய உலகில் இணையம் செயற்படுகிறது. இணையம் பற்றிக் குறிப்பிடும் போதே உலகளாவிய வலைப்பின்னல் என்ற தொடரும் சேர்ந்தே குறிப்பிடப்படுகின்றது. இணையத்தைச் சுற்றி வரும் முறையே வலை எனப்படுகிறது. வலை நோக்கர் (Browser) என்ற சிறப்பு ஆணைத் தொடர் மூலம் வலையில் உள்ள கடலளவு தகவல்களைப் பெறமுடிகிறது. இணையம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது என்றாலும் அண்மையில்தான் அதன் பயன்பாடு பெருகி மனித வாழ்வில் ஒரு பெரும் புரட்சியையே உருவாகியுள்ளது. தொடக்கத்தில் இணையம் அஞ்சல் செய்திகள் அனுப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் இணையத்தின் பயன்பாடு சிறுகச் சிறுகப் பெருகி இன்று மின்னஞ்சல். மின்வணிகம், மின்னிசை, மின் அரட்டை, மின் நூலகம் போன்ற பல வகைகளில் பயன்பட்டு வருகிறது. இணையப் பயனாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. இனி வருங்காலத்தில் இது மேலும் அதிகரித்துச் செல்லும் இந்நிலையில் இணையத்தைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறவர்கள் யார்? எத்தகைய தகவல்களுக்காக இணையத்தை நாடுகின்றனர்? இணையத்தின் வாயிலாகப் பெறப்படும் பயன்கள் யாவை? என்பன குறித்து ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

(10 புள்ளிகள்)

- உலகம் சுருங்கி இன்று ஒரு குவலயக் கிராமமாகக் காட்சியளிக்கிறது
- இணையம் இன்று தகவல் பரிமாற்றத்தில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது
- கணினி மூலம் நமக்கு வேண்டிய தகவல்களை நாமே தேடி எடுத்துக் கொள்ள முடிகிறது.
- வலை நோக்கர் (Browser) மூலம் வலையில் உள்ள கடலளவு தகவல்களைப் பெறமுடிகிறது.
- நாளடைவில் இணையத்தின் பயன்பாடு பெருகிக் கொண்டே செல்கிறது.
- இணையத்தைப் பற்றிய அனைத்து விடயங்களையும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

04. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மக்கள் தீயன செய்யாமைக்கு மூன்று காரணங்கள் உள. முதலாவது வாய்ப்பு இன்மை இரண்டாவது அச்சம் மூன்றாவது அவை தகாதன என்ற உணர்ச்சி. ஒருவன் களவு செய்தலிலே எந்நாளும் ஈடுபடுகின்றான். பின் சில நாள் வசதியின்மையால் களவு செய்யாதிருப்பானேல் நல்லவன் என்ற பெயரை பெற்று விடுகிறான். அன்று முதல் அதனை விட்டு நல்லவன் ஆகிறான். அவனும் தண்டனைக்குப் பதில் சன்மானம் பெறுவானேல் அக்களவை மேலும் செய்வான். ஆகவே அவனை நல்லவனாக்கியது அச்சம். வேறொருவன் களவு செய்தல் தவறானது, தீயது என வெறுத்து விலக்கியொழிகிறான். அதனால் அவன் நல்லவன் ஆகிறான். அவன் களவு செய்யும்படி எத்துணை உபகாரம் செய்யினும் அதனை ஒரு போதும் செய்யத் துணிணான். ஆகவே அவன் என்றும் நல்லவன் என்ற பெயரோடு இருக்கிறான். இது போலவே அறத்தைச் செய்தலிலும் பலர் பயன் குறித்தும் சிலர் நல்லது என்ற ஒரே காரணம் குறித்தும் ஈடுபடுகின்றனர். பயன் குறித்துச் செய்பவரினும் நல்லது என்ற ஒரே காரணத்திற்காக செய்பவர் என்றும் மிக்க பெயரும் புகழும் பெறுவர். பயன் குறித்துச் செய்பவரினும் நல்லது என்ற ஒரே காரணத்திற்காக செய்பவர் என்றும் மிக்க பெயரும் புகழும் பெறுவர். பண்டைக்காலத்து வள்ளல்களிற் பலர் அவ்வாறு நல்லாற்றினின்றவரே. ஆய் என்ற மன்னன் அவ்வாறு பயன் கருதாது அறம் செய்தானென்று ஒரு பழைய செய்யுள் கூறும் வள்ளுவரும் மாரியின் உதவியை வாயாரப் புகழ்கின்றார். உதவிகளில் எல்லாம் மேலானது பயன் கருதாத உதவியேயாகும்.

www.tkedu.lk

1. மக்கள் தீய செயல்களில் ஈடுபடாமைக்குரிய காரணங்கள் எவை?
   - வாய்ப்பு இன்மை
   - அச்சம்
   - தகாதன என்ற உணர்வு

2. உலகில் நீண்ட காலம் பெயரும், புகழும் பெறுபவர் யார்?
   - நல்லது என்ற காரணத்துக்காக ஒன்றை செய்வோர்.

3. பந்தியில் வலியுறுத்தப்படும் கருத்து யாது?
   - பயன் கருதாது அறம் செய்தல் வேண்டும்.

4. வாயாரப் புகழ்தல் என்பதன் பொருள் யாது?
   - பாராட்டுதல்

5. வள்ளல், மாரி என்பவற்றுக்கான எதிர்ப்பொருட் பதங்களைத் தருக. (10 புள்ளிகள்)
   - வள்ளல் - உலோபி
   - மாரி - கோடை

05. இலங்கையின் போக்குவரத்துத் துறையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் பற்றியும் போக்குவரத்து விதிகளை அனுசரிப்பதன் அவசியம் பற்றியும் விளக்கம் கேட்கும் உமது நண்பனுக்கு 100 சொற்களில் கடிதம் எழுதுக.

அல்லது

உமது பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாக்குழுவின் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு அறிக்கை ஒன்று தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

- அமைப்பு – 05
- உள்ளடக்கம் – 07
- மொழிநடை – 03

www.lkedu.lk

வலயக்கல்வி அலுவலகம் - மூதூர்

க.பொ.த. (சா/தர)ப் பரீட்சை - 2020

மாதிரி வினாத்தாள்

பாடம் : தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம் : 2 மணித்தியாலம்

பெயர்- .....

பகுதி III

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.

1. நீவிர் ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தீர் என்றாள்.

அ) ஐவீர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
- இராமன், பரதன், இலக்குவணன், சத்துருக்கன், குகன்

ஆ) அகலிடம் என்று குறிப்பிடப்படும் நாடு எது?
- அகன்ற பூமி

2. "கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர் ககன சித்தர் வந்து காயசித்தி விளைப்பர்....."

அ) இதனைப் பாடிய புலவர் யார்?
- திரிகூடராசப்ப கவிராயர்

ஆ) காயசித்தி என்பதன் பொருள் யாது?
- உடல் அழியாமல் நிலைபெறச் செய்யும் மூலிகை

3. அட்சய இருதயம் என்ற கலையை அவன் படித்திருந்தான்

அ) "அட்சய இருதக் கலை என்றால் என்ன?
- ஒரு பார்வையில் எண்ணிக்கையை கணித்துக் கூறும் கலை

ஆ) இங்கு அவன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
- இருதுபர்ணண்

4. "கொங்கர்க் கமராபதி யளித்த கோவே"

அ) இங்கு குறிப்பிடப்படும் மன்னன் யார்?
- சோழமன்னன்

ஆ) அமராபதி என்று குறிப்பிடப்படுவது எது?
- விண்ணுலக தலைநகரம்

5. "பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த நிதியிழந்தனம்"

அ) இங்கு யாருடைய இலட்சியம் குறிப்பிடப்படுகின்றது?
- அரிச்சந்திரன்

ஆ) பாலன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
- மகன் லோகிதாசன்

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "





Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

6. “ஆசைக்கிளியே ஆசியத்து உம்மாவே”

அ) இப்பாடல் எப்பிரதேசத்துக்குரியது?

- கிழக்கிலங்கை

ஆ) இங்கு குறிப்பிடப்படும் தலைவியின் பெயர் யாது?

- ஆசியத்தும்மா

7. “ஐய அன்பின் நிறைந்தாளை உரை””

அ) இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

- குகன்

ஆ) அன்பின் நிறைந்தவள் யார்?

- சுமித்திரை

8. “சினிமா மொழியைப் பல முறைகளில் வளமடையச் செய்யலாம்.”

அ) சினிமா மொழியின் அம்சங்கள் யாவை?

- ஒலி, படத்தொகுப்பு, காட்சிப்படிமம்

ஆ) சினிமாவை எதன் மூலம் வளமடையச் செய்யலாம்?

- சினிமா மொழியை சரியாகக் கையாள்வதால்

9. “பூத்த ஜோதி வதனம் திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்”

அ) இவ்வடிகளில் இடம்பெறும் உணர்வு யாது?

-

ஆ) ஐம்புலன்கள் யாவை?

- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

10. ”ஆடிக்குடத்தடையும் ஆடும் போதே இரையும்.....

அ) இப்பாடலில் காளமேகப் புலவரால் ஒப்பிடப்படும் பொருள்கள் யாவை?

- பாம்பு, எள்ளு

ஆ) இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?

- சிலேடை

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. யானை அனையவர் நண் பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ) இப் பாடலில் உணர்த்தப்படுவது யாது?

- யானை போன்றவரது நட்பை விடுத்து நாய் போன்றவரது நட்பை தழுவிக் கொள்ள வேண்டும்.

ஆ) இப் பாடலில் இடம் பெற்றுள்ள உவமையணியின் பொருத்தப்பாட்டை விளக்குக.

- யானை பாகனையே கொல்வதால் கூடா நட்புக்கும் நாயானது நன்றியுணர்ச்சி மிக்கதால் நல்ல நட்புக்கும் உவமிக்கப்பட்டுள்ளது.

www.ikedu.lk

2. நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா
ணாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்
றாமன்றே விலங்கற் றிண் டோட்
கைவீரக் களிறனைய காளையிவன்
றன்னோடு கலந்து நீங்க
ளைவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங் கால மளித்தி ரென்றாள்.

அ) இப்பாடலில் குகனின் சிறப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

- மலை போன்ற நீண்ட தோள்களை உடையவன்.
- கைகளினால் வீரச் செயல்களைச் செய்யும் களிறு போன்றவன்.

ஆ) இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

- கோசலையால் பரதன்,குகன் முதலியோருக்கு

3. இந்தச் சினிமா மொழியை, அதன் தன்மையை, தனித்துவத்தை உணர்ந்து, ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது, அங்கே நல்ல சினிமா பிறக்கிறது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு, வாய்ப் பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகிறது. பேசும் மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை, கற்பனை வளத்தைப் பொறுத்தது. சூரியன் உதயமாவதைக் கண்டால் ஒருவன் "ஓகோ விடிகிறது" எனலாம். கவிஞன் அதைக் கண்டாலோ
"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்கிறான்.

அ) நல்ல சினிமா பிறப்பதும் நலிவடைவதும் எதனால்?

- சினிமா மொழியை, அதன் தன்மையை, தனித்துவத்தை உணர்ந்து, ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது, அங்கே நல்ல சினிமா பிறக்கிறது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு, வாய்ப் பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகிறது.

ஆ) "மொழியின் நயம் அதனைப் பிரயோகிப்பவனைப் பொறுத்தது" என்பதை கட்டுரையாசிரியர் எவ்வாறு விபரிக்கிறார்?

- சூரியன் உதயமாவதைக் கண்டால் ஒருவன் "ஓகோ விடிகிறது" எனலாம். கவிஞன் அதைக் கண்டாலோ "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்கிறான்.

4. கழியும் பிழைபொருட்டள்ளி நன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்
பொழியும் படிக்குக் கவி காளமேகப் புறப்பட்டதே.

அ) காளமேகப் புலவரின் இயற்பெயர் யாது?

- வரதன்

ஆ) காளமேகப் புலவரின் கவிச்சிறப்பு எவ்வாறு விளக்கப்படுகிறது?

- வண்கவிதை மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப் பொழியும் படிக்குக் கவிபாடக் கூடியவர்.

5. இந்தக் கஷ்டகாலத்திலும் என் மகன் அதனுடன் மிகவும் வாஞ்சையாகப் பழகினான். மணிக்கணக்காக விளையாடிக் கொண்டிருப்பான். நீல நிற யானையும், சிவப்பு நிறக்குதிரையும் வரைவான். பள்ளியில் கொடுக்கும் வீட்டு வேலைகளை கணிப்பொறியில் செய்வான், கதை சொல்லும் போது ''ம்'' சொல்லுவது போல , கம்பியூட்டரும் ''ங்ம்,ங்ம்'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும். அவன் ஏதாவது தப்பாகச் செய்யும் போது தான் அப்படி எச்சரிக்கும் என் மகன் அந்த நேரங்களில் '' கோவிக்காதே, கோவிக்காதே'' என்று சொல்லி அதைச் சமாளிப்பான்.

www.ikeduk.lk

அ) அரவிந்தன் கணிப்பொறியில் செய்யும் வேலைகள் எவை?

- விளையாடுதல், வரைதல், பள்ளியில் கொடுக்கும் வீட்டு வேலைகளை செய்தல்.

ஆ)'' வாஞ்சையுடன் பழகுதல்'' என்ற தொடரை விளக்குக?

- நெருக்கத்துடன் பழகுதல்.

03. 'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரையில்

அ) நாவலர் வீறுடன் எழுந்த வேகம்

- கம்பராமயன பாடல் அடிகள் மூலம் கட்டுரை ஆசிரியர் நாவலர் எழுந்த வேகத்தை சித்தரிக்கிறார்.
- வேள்வித் தீயினுள் நெய்யை சொரிந்தாள் நெருப்பின் வயாயனது எவ்வாறு கொழுந்து விட்டு எரியுமோ அது போல எழுந்தாள். (பொழிந்த நெய்.....)

ஆ) நாவலரின் நேர்மை என்பவற்றை விளக்குக.

- சேர் பொன் இராமநாதனை சட்ட சபைக்கு அனுப்பப்பாடுபடுதல்.
- தான் நோயுற்ற நிலையிலும் கூட்ட நிகழ்வுகளை அவதானித்தல்.
- பிறிற்றோவின் நேர்மையற்ற செயலைக்கண்டு ஆத்திரமடைதல்.
- தந்தி, தபால் கட்டுக்களை கொண்டுவரச் சொல்லுதல்.
- மக்களை நேர்மையின் பால் வழிநடாத்துதல்.

' எது நல்ல சினிமா' என்ற கட்டுரையில்

அ) சினிமா மொழி

- காட்சிப்படிமம்:- மனித மனத்தின் பல்வேறு உணர்வுகளை வெளிட்காட்டுவதற்கு காடசிப் படிமம் அவசியம்.
- ஒலி :- காட்சிப்படிமங்களுக்கு ஒலி துணையாகவுள்ளது. காட்சிப்படிமத்தை விடுத்து ஒலிக்கு முக்கயித்துவம் கொடுக்கும் போது சினிமா சீரழிகிறது.
- படத் தொகுப்பு :- தனித்தனியாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிப் படிமங்கள் சிறந்த முறையில் கோர்வையாக்கப்படுவதாகும்.

ஆ) சினிமாவின் சீரழிவிற்கான காரணங்கள் என்பவற்றை விளக்குக.

- சினிமா , நாடகத்துக்கு அடிமையாக்கப்பட்டிருத்தல்.
- சினிமா மொழி சரியாகக் கையாளப்படாமை.
- வாய்ப் பேச்சினால் கதை சொல்ல முற்படுதல்.

(15 புள்ளிகள்)

04. குகப்படலத்தில்

அ) கைகேயியின் கொடுந்தன்மைகள்.

- துன்பங்கள் யாவற்றையும் உண்டாக்கியவள்.
- பலியாகிய குழந்தைக்கு வளர்ப்புத் தாய்.
- தீவினையுடையவள்.
- தரசரதன் சுடுகாட்டுக்குச் செல்ல காரணமானவள்.
- மகனாகிய பரதன் துன்பக் கடல் செல்லக் காரணமானவள்.
- இராமன் காட்டினிடையே செல்லக் காரணமானவள்.
- திருமாள் திருவுருவத்தாள் அளந்த முழு உலகையும் தன்மனத்தின் கொடுமையாள் அளந்தவள்.

www.ikdu.lk

ஆ) பரதன் குகனுக்கு கோசலையை அறிமுகம் செய்யும் விதம்.

- தசரதனின் முதல் பட்டத்தரசி.
- இராமனை மகனாகப் பெற்றவள்.
- இராமன் பிறந்ததாள் அடையவேண்டிய அரச செல்வத்தை பரதன் பிறந்த காரணத்தால் இழந்தப் பெருமைக்குரியவள்.

இ) குகனின் குணாம்சங்கள் புலப்படுத்தப்படுமாற்றை விபரிக்குக.

- இராமனின் தோழன்.
- பரதன், இலக்குவனன், சத்துருக்கன் போன்றோருக்கு அண்ணனாகும் தகைமை பெற்றவன்.
- மழை போன்ற நீண்ட அழகிய தோள்களை உடையவன்.
- கைகளால் வீரச் செயல்களைச் செய்யும் களிறு போன்றவன்.
- கைகேயின் கொடுந்தன்மையை அறிந்தும் அவளைத் தாயாக ஏற்று வணங்கியவன்.

பேதைமையில்

அ) பேதைமை என்றால் என்ன

- பேதைமை என்றால் தனக்கு கேடு தருவனவற்றை கைக்கொண்டு ஆக்கம் தருபவற்றை கைவிடுதலாகும்.
- பேதைமை எல்லாவற்றுள்ளும் மிகப் பேதைமையானது தனக்கு ஆகாத ஒழுக்கத்தில் விருப்பம் கொள்ளுதலாகும்.

ஆ) பேதையரின் இயல்புகள் என்பவற்றை விளக்குக.

- நாணாமை, நாடாமை, நாரின்மை, பேணாமை
- நூல்களை ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அதன்படி நடவாதிருத்தல்.
- ஏழு பிறப்பிலும் தான் புகுந்து வருந்துவதற்குரிய நரக துன்பத்தை பேதை தன் ஒரு பிறவியில் உருவாக்கிக் கொள்வான்.
- பேதை ஒரு செயலை செய்தால் குற்றவாளியாக தளை பூணுவான்.
- பேதை பெருஞ் செல்வமடைந்தால் அயலார் நன்மை பெற உறவினர் பசியால் வாடுவர்.
- பேதை தன் கையில் ஒரு பொருளைப் பெற்றால் பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்து மயங்கியது போலாகும்.

(15 புள்ளிகள்)

5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

05. சங்கப்பாடல்கள் பகுதியில்

அ. தலைவன் மீது தலைவி கொண்ட அன்பு

- தலைவனோடு கூடி வாழாவிட்டாலும் அவனோடு வாழ்ந்த நினைவில் தலைவி இன்பமடைதல்.
- இதற்கு சான்றாக அவளது வளையல்கள் கழராமல் இருத்தல்.

ஆ. தலைவிக்கும் தோழிக்குமிடையிலான உறவு ஆகியன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

- பாடல் தோழி கூற்றாக அமைதல்.
- தலைவியின் சுக துக்கத்தில் தோழியும் கலத்தல்.
- இன்புறேஎம், இன்புற்றனெம் என பன்மையில் கூறுதல்.

(10 புள்ளிகள்)

www.ikdu.lk

06. நாட்டார் பாடல்கள் பகுதியில்

அ) ஏர்ப்பாடலின் ஊடாக வெளிப்படும் சிந்தனைகள்.

- மாடுகள் பெருக வேண்டும்.
- உணவுப் பெருக்கம், உழவுத் தொழில் சிறக்க வேண்டும்.
- மழை பெய்ய வேண்டும், நாடு தழைக்க வேண்டும்.
- உலக மக்கள் சிறப்புடன் வாழ வேண்டும்.

ஆ) காதற் பாட்டில் ஆழமான காதல் உணர்வுகள். என்பன புலப்படுமாற்றை விளக்குக.

- பல்வேறு பெயர்களினூடாக தலைவியை அழைத்தல்.
  (ஆசைக்கிளி, நீலவண்டு, மருதங்கிளி, ஏலங்கிராம்பு, சீனத்துச் செப்பு, சிங்கார பூநிலவு)
- உறவுமுறைகளைக் கூறி அழைத்தல். (மாமிமகள், மச்சி)
- பாதுகாப்பாக வீடு போய் சேர வேண்டும் என நினைத்தல்.
- உன்னை அடையாவிட்டால் இறந்து விடுவேன் என சத்தியம் செய்தல்.
- உன்னை ஏமாற்ற மாட்டேன் என உறுதி கூறல்.
- அவளது நினைவில் வாடுதல்

(10 புள்ளிகள்)

07. தனிப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு

அ) கழியும் பிழை பொருட்டள்ளி என்ற பாடலில் காளமேகப் புலவரின் கவித்திறம்

- கழிக்கத்தக்க பிழைகளையெல்லாம் விலக்கி, நல்ல நூல்களை கற்றுணர்ந்து, பொதிகைமலையில் நிலை கொண்டு, அழகிய கவிதை பாடுகின்ற புலவர்களின் மனமாகிய வானத்திலே இடித்து, முழங்கி, மின்னி கவிதை மழை பொழியும் படியாக கவிபாடுபவர்.

ஆ) சீதக்காதி வள்ளலின் கொடைச்சிறப்பு என்பனவற்றை விளக்குக?

- நெல்லும் பொன்னும் சமமாக விற்கப்பட்ட பஞ்ச காலத்திலே, யார் தடுத்தாலும் அன்னதானத்திற்கு நானிருக்கிறேன் என மார் தட்டி கொடை கொடுப்பவன்.

(10 புள்ளிகள்)

www.ikdu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள், செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்

இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu